## செப்டம்பர் - 09 - சனி
### புனித பீட்டர் கிளாவர்

**முதல் வாசகம் கொலேசேயர் 1 : - 21 – 23**

சகோதர சகோதரிகளே! முன்பு நீங்கள் இறைவனோடு உறவற்றவர்களாய் இருந்தீர்கள் அவரைப் பகைக்கும் உள்ளம் உடையோராய்ச் தீச்செயல்கள் புரிந்து வந்தீர்கள். இப்பொழுது, நீங்கள் தூயோராகவும் மாசற்றோராகவும் குறைச் சொல்லுக்கு ஆளாகாதோராகவும் தம்முன் விளங்குமாறு ஊனுடல் எடுத்த தம் மகனது சாவின் வழியாகக் கடவுள் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். நீங்கள் நற்செய்தியைக் கேட்டுப் பெற்றுக்கொண்ட எதிர்நோக்கை இழந்துவிடாமல் நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு அதில் உறுதியாக நிலைத்திருங்கள். உலகெங்கும் படைப்பனைத்துக்கும் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. பவுலாகிய நான் இந்நற்செய்தியை அறிவிக்கும் திருத்தொண்டன் ஆனேன்.

**பதில்பாடல் :** இதோ கடவுள் எனக்குத் துணையாய் இருக்கிறார

**நற்செய்தி : லூக்கா 6: 1 – 5**

அக்காலத்தில் ஓய்வுநாள் ஒன்றில் இயேசு வயல்வழியே செல்ல நேர்ந்தது. அவருடைய சீடர் கதிர்களைக் கொய்து கைகளினால் கசக்கித் தின்றனர் பரிசேயருள் சிலர், ”ஓய்வுநாளில் செய்யக் கூடாததை நீங்கள் செய்வதேன்?” என்று கேட்டனர். அதற்கு இயேசு மறுமொழியாக, ”தாமும் தமமுடன் இருந்தவர்களும் பசியாய் இருந்த போது, தாவீது செய்ததைக் குறித்து நீங்கள் வாசித்தது இல்லையா? அவர் இறை இல்லத்திற்குள் சென்று, குருக்கள் மட்டுமே அன்றி வேறு எவரும் உண்ணக்கூடாத அர்ப்பண அப்பங்களை எடுத்துத் தாம் உண்டதுமன்றித் தம்மோடு இருந்தவர்களுக்கும் கொடுத்தார் அல்லவா?” என்று கூறினார். மேலும் அவர்களிடம், ”ஓய்வுநாளும் மானிடமகனுக்குக் கட்டுப்பட்டதே” என்றார்.

**தியானம்:** இறைவன் தன்னைவிட்டு ஒருவரும் விலகி வாழாது இருக்க, தனது தந்தையின் சித்தத்தின்படி எமது பாவங்களிலிருந்து மீட்டெடுக்கவே இவ்வுலகிற்கு வந்தார். ஆனால் அதை உணராது மீண்டும் பாவ வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கினறோம். எமக்கு ஏற்படும் நோய்கள், வேதனைகள், அவமானங்கள் இவைகள் யாவும் இறைவன் எமக்கு கொடுக்கும் தண்டனைகள் அல்ல மாறாக நாங்கள் மனமாற்றமடையவே. அன்று நாமான் நோயிலிருந்து விடுபட ஏழுமுறை யோர்தான் ஆற்றில் மூழ்கி குணம் பெற்றார். அதன் பின்பு இறைவனை விட வேறு தெய்வங்களுக்கு பலியிடமாட்டேன் என்று மனமாறுகின்றார். நற்செய்தி வாசகத்திலும் கூட இயேசு 10 தொழுநோயாளர்களுக் குணப்படுத்துகின்றார். ஆனால் இயேசுவிற்கு ஒருவர் மட்டுமே மீண்டும் வந்து நன்றி செலுத்தினார். இன்று எமக்கு ஏற்படும் நோய்கள், கஷ்டங்கள் யாவும் நாங்கள் மனமாற்றம் அடையவே. ஏனென்றால் இறைவன் தண்டிப்பவர் அல்ல, நாங்கள் செய்யும் பாவத்தினால் எமக்கு நிகழ்கின்றது என்பதை மறந்து விடுகின்றோம். எனவே எமது பாவங்களை நாங்கள் ஆராய்ந்து பார்ப்போம். “இயேசுவே தாவீதின் மகனே” என்று அவர்கள் கேட்டு விடுதலை அடைந்தது போன்று அவரிடம் கேட்டு நாமும் விடுதலை அடைவோம். குணமடைந்தவர்களில் இயேவிற்கு நன்றி கூறியவரைப் போன்று நாமும் வாழ்வோம்.